# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு -9

01-02-2017



சமீபத்திய சங்கடங்களில் இருந்து
------------------------------------------

அலறல் இல்லாத
பெருஞ்சத்தத்துடன்
முனகிக்கொண்டிருந்தது
சமீபத்திய வலி.
அரிவாள்மணையால் அறுத்தது போக
மிச்சமிருந்த
செஞ்சோற்றுக் கடன்கள் எல்லாம்
கூர் தீட்டிய வாளால்
இன்னும் சோகமாக நறுக்கப்பட்டன.

செய்நன்றி கொண்டவனை
கொல்வதற்கு ஏதுவாக
துரோகத்தில் நாணேற்றி
அன்பில் அம்பெய்து
சாய்ந்து ஒடிந்து விழ வைக்க
தாரை தப்பட்டைகள்
தாறுமாறாக முழக்கப்பட்டன.

பூப்பெய்திய பஞ்சோந்தியின்
முதுகுப் புற வண்ணங்களை
பூக்களாக எண்ணி
பூஜைக்காகக் கோத்தெடுப்பது போல,
மாண்புமிகு நினைவுகளை
மாலையாக்கி அணியும் நேரத்தில்
நற்குணத்தின் குறியீடுகள்
ரத்தம் சிந்தி அழிக்கப்பட்டன.

சதைக்கு மேல் வளர்ந்த
கால் நகத்தின்
இடது ஓரத்தில்
துருத்திக் கொண்டிருக்கும்
நகக் கீற்று வழியாக
ஒழுகும் அழுக்கு ரத்தமாக,
தழுதழுக்கும் உயிரோசை
ஓர் ஓரத்தில் புலம்பிக் கொண்டிருக்க,
வேசமிடும் பாசம் வேறு வழியாக
புத்திக்குள் நுழைந்து
அன்புக்கு இன்னும் அதிகமாக
படியளக்க ஆரம்பித்துவிட்டது.

--- மனோ ரெட்

அரசின் குடியரசு தின விழா
இனிதாய் நிறைவுற்றதை
நினைவூட்டும் விதமாய்;
தேசிய கீதம் முழங்க பெற்றது;
முடியும்வரை பொறுமை காத்த
அந்த சிறுவர்கள்,
காலி கோணிபைகளுடன்
கும்பலாய் திடலுக்குள்
புகுந்து,
மக்கள் விட்டு போயிருந்த
காகித தேசிய கொடிகள்,
காலி கோப்பைகள்,
மற்றும் தேசியம் பேசிய பதாகைகளை,
பொறுக்க ஆரம்பித்தனர்;
அதில் ஒருத்தனின்,
கிழிந்து தொங்கும் சட்டைபையில்,
குத்தபட்டிருந்த
தேசிய கொடியில்
பச்சை மேல்பக்கமாய்,
பச்சையாய்
தெரிந்தது .....

--- கோ. ஸ்ரீதரன்

பூரணியின் கால்களில்
இடது கட்டை விரலின் நகத்தில்
யாரோ பிய்த்து தின்றது போல்
நாலணா அளவிற்கு
சொத்தை ஓட்டை ஒன்றுள்ளது.
அவளிடம் அது பற்றி
கேட்கும்போதெல்லாம்
இருண்மை, படிமம்
போல் உள்ளே அழுத்தி வைத்த
சொற்களை இறைக்கிறாள்.
தெளிவாய் புரிய மாட்டேன்
என்று அடம் பிடிக்கிறது.
ஒருவாறாக அவள் இயற்கை மரணம்
எய்திய பின் குளிப்பாட்டுகையில்
சிறிய வயதில்
தூக்க முடியாமல் பூண்டை நசுக்கி
தேய்த்தரைக்கையில்
குழவி பலமாய் விழுந்து
ரத்தங்கட்டி உள்உளுத்து
கொஞ்சங்கொஞ்சமாய்
ஓட்டையானதாய்
செவியில் விழுந்தது.
சிதையில் வைக்க தூக்கிப் போகையில்
நாலைந்து திவலைகள்
சாவதானமாயும்,
சாய்மானமாகவும்
ஒழுகியும் ஒழுகாமலும்
சுடுகாட்டின்
இறுதி வரை அது மட்டுமே
அவளுடன் போனதை நாங்கள் பார்த்தோம்.

--- வேதா நாயக்

பிராணிகளின் பிரயத்தனம்
-----------------------------

இராத்தூக்கத்தில்
மிக சத்தமாக ஒப்பிக்கும் மனநிலையில்
ஊளையிடும் ஏமலிகளின் வாய்கள்
எனதன்றாட வாழ்வில்
நட்பு பாராட்டும் உறவு
பேணும் பிராணிக் கூட்டங்களுடையதைப்போல்
தோற்றமளிக்கின்றன
மற்றொன்றைக் காட்டிலும்
ஒன்று சிறந்ததாவதற்கு
இன்னொன்றை சிதைத்தலும் தகுமேவென
பிரயத்தனப்படும் அப்பிராணிகள்
முன் அந்தி மாலையில்
காடுமேடெங்கும் அலைந்து திரிந்து
அவ்வவற்றின் நரகலையே தின்று தீர்த்திருந்தன.

--- யோகன்

குளத்தைச் சுற்றி மரங்களிருந்தன
என்பார்கள் சிலர்
மரங்களுக்கு நடுவே குளமிருந்ததாகச்
சொல்வார்கள் வேறு சிலர்.
குளமும், மரங்களும்
அங்கிருந்ததே தெரியாது
அவையிருந்த இடத்தில்
இன்றிருப்போருக்கு.

--- சுப்ரா

கட்டிடங்களை சுமந்துவந்த கவிதையில்
கடைசி வரியாய் முடிந்தது
விவசாயம்

--- கி.கவியரசன்

சத்யாவை சுமப்பவன்
----------------------

சத்யாவை சுமப்பவனை நீங்கள்
எங்கும் கண்டிருக்கலாம்...
நாற்பது தாண்டியும் திருமணம்
முடித்துக்கொள்ளாதவனாய்..
எண்ணெய் கடைத்தெருவில்
குடித்துவிட்டு வழிபவனாய்...
காதலியின் பெயரை வலது கையில்
பச்சை குத்திக் கொண்டவனாய்..
போலீஸ் கோட்டர்ஸ் எதிரிலிருக்கும் பாரில்
கட்டிங்கிற்காக வேண்டி நிற்பவனாய்...
ஊருக்கு வந்து திரும்பும் நண்பனை
பேருந்து நிலையமழைத்து செல்ல
எக்சஷலை முதல் ஆளாய் திருகுபவனாய்..
தெரிந்தவர் வம்பிழுக்கப்படுகையில்
முதல் ஆளாய் அடி வாங்குபவனாய்..
விருப்ப நடிகரின் சோவுக்கு டிக்கெட்
வாங்கி கொடுத்து கெத்து காட்டுபவனாய்..
சத்யாவை சுமப்பவனை நீங்கள் எங்கும்
கண்டிருக்கலாம்..!
அவன் நண்பனின் மகள்
சத்யாவை சுமந்த அந்த ஒரு காலையில்
அவள் ஐஸ்க்ரீம் வேணும் மாமா என்றாள்..
அவன் அந்தத் தெருவில் இருக்கும் பேக்கரியில்
தன் சட்டைப்பையிலிருக்கும் பத்து ரூபாய்க்கு
கிடைத்த தேங்காய் பன்னை ஐஸ்கீரிமென
நம்பவைத்துவிட்டு விழிகளை
துடைத்துக்கொண்டதையும் நீங்கள் பார்த்தவராக
இருக்க கடவ...!

--- கனா காண்பவன்

நூல்கள் நுழைவதற்கென்றே
ஓட்டைகள் போடுகின்றன
சில ஊசிகள்!
--- துரை வசந்தராசன்

வெய்யில் வேய்ந்த
நடைபாதை
காய்கறிக் கடையில்
எனக்கும் கிழவிக்கும்
நடந்த
இரண்டு ரூபாய் பேரத்தில்
இறுதியில்
கிழவியே வென்றாள்

அவள்
வியர்வை நைத்த
சுருக்குப் பையில்
மெல்ல மெல்ல
சேர்கிறது
தாயிழந்த
தன் பேரனின்
கல்லூரிக்கான கட்டணம்

--- துருவன் பாலா

தும்பியை பிடித்து
ஒரு உள்ளங்கைக்குள்ளும்
வண்ணத்துப்பூச்சியை பிடித்து
மறு உள்ளங்கைக்குள்ளும்
அடைத்துக் கொள்ள,
விரல்கள் மூடிய கைகளுக்குள்
பெருஞ்சமரின் பேரிரைச்சல்..
விரல்கள் அனைத்தையும் திறக்க
பறந்து சென்ற
தும்பியும், வண்ணத்துப்பூச்சியும்
திறந்த கைகளின் மேல்
தானாக வந்தமர சூழும் மௌனம்
அலெக்ஸான்டரின்
சவப்பெட்டிக்குள்ளிருந்து எதிரொலிக்கிறது..

--- ருத்ரன் ரிஷி

தேசத்தின் சுவர்களில்
உப்புக் காற்று வீசிக் கொண்டிருக்கிறது
காந்தியின்
கைத் தடியை களவாடியவர்கள்
கோட்சேவின் துப்பாக்கிக்கு
முதல் மரியாதை செய்து கொண்டிருக்க,
செல்லாக் காசுகளில்
சிக்கிக் கொண்ட காந்தி
புதிய நோட்டுகளில்
அச்சுப் பிழையாக மாறிவிட்டார்,
தேசிய கீதங்கள்
கேளிக்கைக் கூடங்களின்
வழிபாட்டுப் பாடலானது,
கதராடைக் கிராமத்தில்
பட்டாடைக்காரர்
இராட்டினம் சுற்றிக் கொண்டிருக்க
பன்னாட்டு மாடுகள்
நம் நாட்டு விவசாயத்தில்
மேய்ச்சல் நடத்துகின்றன,
அகிம்சை போராட்டத்திற்கு
அறவே அனுமதியில்லையென்று
மெரினா சம்பவம்
பயம் காட்டிக் கொண்டிருக்க,
தடியெடுத்தவர்களின் ஊர்வலம்
தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது,
காந்தியின் நினைவு நாளில்
கறை படிந்தவர்கள்
அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்க,
காந்தி இப்போது, சுய பரிசோதனை
செய்து கொண்டிருக்கிறார்.

--- முகமதுபாட்சா

முப்பெரும் மழை
------------------

முகம் துவங்கி
என் உடலெங்கும் வருடிய
உன் விரல்களின்
முந்தைய விரலடித் தடம் தேடியே
என்னுள் பயணப்படுகின்றன
இம் மழைத்துளிகள்.

என்னை எதிர்கொள்ள முடியாமல்
வெட்கத்தினுள்ளே உன்னை நீ
மறைத்துவிட்டு
நான் நனையாதிருக்க
உன் துப்பட்டாவில் குடைபிடிக்க,
துப்பட்டாவின் உள்வழி கசியும்
விரகதாபத்தின் சிறுமழையோ
என்னை முழுவதுமாய் நனைக்கிறது.

உன் முகத்தில் படறும்
கற்றைமுடியின்
ஒற்றைக் குழல்வழி வடிந்துவரும் துளிநீரையெல்லாம்
நீ விரல்களில் எடுத்து சிதறிவிடுகிறாய்
அங்கே
இன்னொன்றாகப்
பெய்யத் துவங்குகிறது.
உன் மழையும்.

கிறங்குவதும்
உடல் சுருங்குவதும்
முகம் சுளிப்பதுமாக
மழையால் நீ தரும் எதிர்வினையில் பெய்துவிடத்தான்
போகிறது
இன்னொரு பெருமழையும்.

--- ஆண்டன் பெனி

செழுமை
----------

எங்களோடு சேர்ந்து
போராட வரவேண்டாம்
மகா அரசியல் ஜனங்களே..

வெயிலும் மழையும்
உங்களுக்கு ஒத்துவராது.
வேதனைகளில் வாழ்ந்தும்
பழக்கமில்லை உங்களுக்கு...
சேறும் சகதியும்
உங்களுக்கு கிருமிகளின் இருப்பிடம்....!

இருந்தாலும்
எங்களுக்கொரு
உதவிசெய்ய வேண்டியிருக்கும்..

எதற்கும்
உங்கள் கைகளில்
வலுவேற்றி
வைத்துக்கொள்ளுங்கள்.

ஒட்டுமொத்தமாய் சாகும்
எங்களைத் தூக்கி
இடம் மாற்ற வேண்டும்..

மயானம் வரை கொண்டு
போகவேண்டுமென்ற கவலை
உங்களுக்கு வேண்டாம்.

குடும்பமாய் செத்தாலும்
எங்கள் உடல்களை
அருகிலிருக்கும்
வயல் பாத்தி
ஒவ்வொன்றுக்குள்
தனித்தனியாய்
எடுத்துப் போட்டுவிடுங்கள்.

சேர்ந்தே செழிக்கிறோம்.
பொருளாதார வளம்
நிறைந்த இந்த திருநாட்டில்....!

--- க.அர.இராசேந்திரன்

புத்தரும் போதிமரமும்
----------------------

அரசகுமாரன்,
அன்புநிறை சித்தார்த்தன்
அகிலத்தின் துன்பத்திற்கு
அடிப்படைக் காரணம்தேடி
கானகம்நாடி கடுந்தவம்புரிய
போதிமரத்தடியில் அமர்ந்தார்.

ஆழ்ந்ததியானத்தில்
அவரிருந்த போது
மரத்திலிருந்த காகமொன்று
முகத்தில் எச்சமிட்டதே!
தியானம்களைந்ந சித்தார்த்தன்
புத்தராக போதிக்கலானார்.

அரசநிழலடிக்கு ஆசைப்படாமலிருந்தால்
தனக்குஇத்துன்பம் வந்திருக்காது என்று.
ஆசையே துன்பத்திற்குக்காரணம்
ஆசையை ஒழித்தால் துன்பமின்றி
ஆனந்தவாழ்வு வாழலாம்-இந்த
அவனியை என்றும் ஆளலாம்,
அனைவருக்கும் இதையே கூறினார்
அறிவைஎடுத்துப் பரிமாறினார்.

--- அ.முத்துசாமி

விவசாயி ஆவேன் நான்
-------------------------

தகுதியான கல்விதன்னைக் கற்ற பின்பு
--தலைதூக்கி என்னவாக ஆவீ ரென்றே
வகுப்பறையில் பாடத்தை நடத்தி விட்டு
--வழக்கமாக ஆசிரியர் வினாதொ டுத்தார்
பகுத்தறியும் அறிவுபெற்று பட்டம் பெற்று
--பல்வகையாய் திறன்களையும் பெற்று நாங்கள்
வகுக்கின்ற வாழ்க்கையிலே பலரும் போற்ற
--வரித்திடுவோம் பணிகளென்றார் மாண வர்கள்!

பொறியாளன் ஆவேனென் றொருவன் கூற
--பொலிந்திடுவேன் மருத்துவனாய் என்றான் மற்றோன்
அறிவியலில் அறிஞனாகிப் புதிய தாக
--ஆக்கங்கள் கண்டுபிடித் தளிப்பேன் என்றும்
குறிக்கோளே பிறகோளில் காலை வைத்துக்
--குவிந்துள்ள உண்மைகளைக் காண்ப தென்றும்
அறிவித்தார் ஒவ்வொருவர் தங்கள் நெஞ்ச
--ஆசைகளை வரிசையாய் எழுந்து நின்றே!

ஒருவனதில் விவசாயி ஆவேன் என்றே
--ஒலிகொடுக்க அனைவருமே சிர்த்தே கேட்டார்
பெருமைமிகு பணியிருக்க விவசா யத்தின்
--பெயரெதற்குத் தேர்ந்ததென்றே! மனைக ளாக்கும்
அரும்வயலைக் காப்பதற்கும் வேறு வேலை
--ஆற்றுவோரின் பசிதன்னைப் போக்கு தற்கும்
வருவாயைப் பெருக்கிநாட்டை உயர்த்து தற்கும்
--வாய்த்தபணி எனவிளக்கப் புகழ்ந்தார் சேர்ந்தே!

--- பாவலர் கருமலைத்தமிழாழன்

வாசலில் கோலமிடுகிறாள்
அழகாய் இருக்கிறது
உடுத்தியிருந்த சேலை

--- சாண்டில்யன் விவேகானந்தன்

அவர்கள் மட்டும் ஏழைகளல்ல
--------------------------------

அவர்களின் காயங்களைக்
காட்டச் சொன்னார்கள்
கூன்விழுந்த முதுகுகளின் வரிகள்
இவர்களுக்குக் காயமாகப் படவில்லை
காய்த்துப்போன கைகளின் கொப்புளங்கள்
உழைப்பில்லையென நிராகரிக்கப்பட்டன
செருப்பின்றி நடந்த பாதங்களின்
நிறமிழந்த அடிகள்
பூசப்பட்ட பொய்களென
ஒதுக்கி வைக்கப்பட்டன

ஈரத்துணி கட்டிப்பழகிய
ஒட்டிய வயிறுகளை
உணவுக் கோளாறுகள் என்றார்கள்
ஒடுக்குவிழுந்த விழிப்பள்ளங்களை
ஊட்டச் சத்தின்மையென
உறுதியாகச் சொன்னார்கள்
கருமையடைந்த தோல்களின் வலியை
கோடையின் கொடுமை என்றார்கள்

காற்றுக்கே அஞ்சும் ஓலைக்குடிசைகள
இடப்பற்றாக்குறையென
இதமாகச் சொன்னார்கள்
பசிகளில் மரிக்கும் உயிர்களின்
பெயர்களையாவது எழுத

எப்படியோ...
ஏழ்மையென்பது ஏழைகளின் விதியல்ல என
ஐந்து நட்சத்திர விடுதியின்
வட்ட மேஜை விருந்துகளில்
மீண்டும் அமர்ந்தனர் கூடிப் பேச!

--- முனியாண்டி_ராஜ்

நீலப்படத்தில் லயித்திருக்கும் கண்கள்
நிர்வாண உடல்களின்
பசிகொண்ட இரைப்பைகளின்
விசாரணைகளில்
சிக்கிக் கொள்கின்றன
லோஃபரிக் எனும் தேவதைப்பெண்
உடைகளற்று லன்டன் மாநகர வீதிகளில்
நிர்வாணமாக பயணம் செய்கையில்
வரிச்சுமை ஏற்றிய அரசுகள்
மனச்சுமையில் தடுமாறின
பசிக்காகவும் பசிக்கு எதிராகவும்
நிர்வாணங்கள் போராடிய படி
இருக்கின்றன
அநிர்வாணங்கள் பேசத்துணியாத
பலவற்றை
நிர்வாணங்கள் அப்பட்டமாக பேசிவிடுகின்றன
ஆங்கிலம் தெரிந்தவர்கள்
வெறும் கண்களை
நிர்வாண கண்கள் என்கிறார்கள்
ஆன்மிகம் தெரிந்தவர்கள்
நிர்வாணத்தை விடுதலை
என்கிறார்கள்
போராடத் தெரிந்தவர்கள்தான்
நிர்வாணத்தை ஆயுதம் என்கிறார்கள்
மலர்களின் நிர்வாணத்தை
ஊரே ரசிக்கிறது
ஆனாலும் அதன் வாசனைகள்
காற்றோடு போராடிக்கொண்டுதானே
இருக்கின்றன
உடைகள் என்றால்
என்னவென்றே தெரியாத
ஆதிவாசிகளை கேளுங்கள்
நிர்வாணம் என்றாலும்
அவர்களுக்கு என்னவென்று
தெரியாது

--- கார்த்திக் திலகன்

தாவும்..
எத்தனை உயரமான மரமென்றாலும்
பதவி பொறுக்கும் குரங்கு!
ஏவும்..
அடக்குமுறையை எப்படியென்றாலும்
அதிகாரத்தில் முழுகியிருக்கும் உறவு !
சீவும்..
சிரம்தனை எவரென்றாலும் புகழுக்காக
துரோகத்தில் சுகம்காணும் கனவு !
நீட்டும்..
கைகள் இரண்டென்றாலும் காசுக்காக
கன்னக்கோல் தூக்கிய மனது !
வளையும்..
எத்தனை வயதானாலும் பதவிக்காக
கும்பினியருக்கு குனிந்த முதுகு !

--- கருணா

சுருங்கச் சொன்னால்
உலகம் விரிவானது...

தெளிவாகச் சொன்னால்
உலகம் குழப்பமானது...

புரிபடச் சொன்னால்
உலகம் புதிரானது...

அழகாய்ச் சொன்னால்
உலகம் அசிங்கமானது...

உண்மையைச் சொன்னால்
உலகம் பொய்யானது...

உள்ளதைச் சொல்லப்போனால்
உலகம் என்ற ஒன்றே இல்லை...

--- ராம்பிரபு

அன்பு செய்யும் மாயங்கள்
--------------------------

கற்களின் இடுக்கில் ஒளிந்திருக்கும்
ஈரத்தில் நனைந்த தளிர்களின் நிழல்
இதயத்தை குளிர்த்தும் பனிமழையாய் அன்பின்
ஆழங்களை உணர்த்தும்

மாயவனத்துள் மறைந்த அன்பின் இலக்கணங்கள்
மாயங்களாய் வரிகளுக்குள் அடைக்கப்பட்ட
காவியங்களாய் புது யுகம் படைக்க...

புன்னகை ஆயுதமாய் கோபங்களை கொன்றுவிட
யுத்தம் செய்ய சொட்டிய இரத்தத்தை
விழுங்கிய  விழிகள் வசந்தத்தை யாசிக்க....

மௌனங்கள் மொழியாய் உயிர்ப்பெற
சிறைப்பட்ட கனவுகள் சிறகு விரித்து
இலக்குகளின் எல்லைகளுடன் கைகோர்த்து
சுதந்திரத்தை சுவாசிக்க...

முடியாத காரியமும் முடிந்திடும் நொடியில் சோகங்கள்
காற்றில் கரைந்து வாசலில் வெற்றிகளை வரவேற்க
வாசமாய் வீசும்....

அன்பின் ஆட்சியில் மாயங்கள் புதிதல்ல அன்பின்
ஆட்சியாளனாய் நீயிருக்க மாயைகளின் அர்த்தங்கள்
புரிவது முடியாத காரியமல்ல....

--- சப்னா_செய்ன்

மகள் ஆளான செய்தி
தலையில் இடியாகத்தான்
வந்துவிழுந்தது
விபச்சாரித்தாய்க்கு...

--- ஜீவா

ஏழு கடலும்
எட்டா தொலைவும்
இடை நீண்டு கிடப்பதை நீ அறிவாய்.
நிலம் பெயர்த்து நீரருந்த
அந்தரத்தில் அலையும் வேர்களறிவாய்.
நீலம் பூத்த வானம்
தனிமை சாம்பல் பூக்கும்.
தாகத்தில் இடைநின்று
ஈரத்தையெல்லாம்
நகராத நாட்காட்டி
பருகித் தீர்க்கும்.
தூண்டில் கொண்டுவந்தவனை
வலை கவ்விக் கொண்ட கதையும்.
வதையுமாய்
உன் சாளரம் திறக்க
நீளும் என் கைககளில்
விடியல் தோறும்
மழைத்துளியாய் இறங்குவாய்
அலைசேர்த்து ஆர்ப்பரிப்பாய்.
உதிரும் இறகுககளை
இந்தப் பனிக்காலத்தைக் கொண்டு
மூடப் பார்க்கிறாய்.....

என்னுடன் சேர்ந்து.

--- குறிஞ்சி நாடன்

அவளும் நானும்
எருதும் கலப்பையும்
வாழ்க்கை என்னும்
வயலில்
எங்களைப் பூட்டி
உழவைத்தது விதி

--- பதஞ்சலி

சிறகுகள் சிதைக்கப்பட்ட பறவையின் பாடல்!
நீ உன் பொழுது போக்கிற்காக
படைத்தெடுத்த, அல்லது செய்த
ஒரு பண்டம் போலவே
கவலையை தரும் விதம் என்னை
கையாளுகிறாய்

எனக்கான வாழ்வு
உன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டதாய்
செயல்களால் நீ ஒப்புவிக்கின்றாய்
அளவு கடந்த உன் அவதானிப்புகள்
ஆயுள் முழுக்க அவஸ்த்தையாகி
விபரிக்க மொழியின்றி வேதனைகளாய்

குரலினை நசுக்கி விட்டு
பேச சொல்கிறாய்
கால் கட்டு போட்ட நீயே
நச்சரித்து எச்சரிக்கிறாய்
நடக்க சொல்கிறாய்
சிறகுகள் சிதைய சிறையில் தள்ளி
பறவென்று பணிக்கிறாய்

மனசு கனத்து துயர் பகிர மொழியின்றி
மௌனத்தின் பாடலாய் விரிகிறதென் கீதம்

வர்ணங்கள் குழைத்து
பூசி மினுக்கிய சிறை கூண்டில்
தள்ளி விட்டு சாத்தப்பட்ட
என் சுதந்திரத்துக்கு முன்னால்
நீ யொரு கைதியாய் நடமாடுகிறாய்

வானளவு உயர்ந்திருந்த
என் பிஞ்சு கனவுகளை
கலைத்து கத்தரித்தது
நீதானென்று என்னால்
நிருபிக்க முடியும் ஆனால்;
எனது நாகரீகம் நாகரீகமானது

--- ரோஷான் ஏ.ஜிப்ரி

மண்தோசைக்கல்...
வார்த்து..

சதைச்சேற்றுக்
களமாடி...

விரலுக்கு நடை
பழக்கிச் சண்டையிட்டு..

பிடித்த பாடல்
ஒன்றுக்கு தாளமிட்டு...

ஊர்சென்று
திரும்பும் வரை காத்திருந்து...

கழுத்தைக் கட்டியவாறே
அட்டிணக்கால்
இட்டுக்கொண்ட....

அப்பாவின் முதுகுதான்
எத்தனை
விசாலமானது.....!

--- கட்டாரி

உள்ளங்கை
-------------
அப்பாவின்
உள்ளங்கையின் இளஞ்சூடு
ஆரம்பப் பள்ளியில் சேரப் போகையில்தான்
அறிவுபூர்வமாக அறிமுகமானது எனக்குள்..

திருவிழா திடல்களிலும்
நெரிசல் மிகும் சாலையிலும்
இறுக்கத்தில் பகிர்ந்த அந்த இளஞ்சூடு
பெற்ற பரிசுகளையும் கேடயங்களும்
மூச்சிரைக்க ஓடிவந்து காட்டிய போது
பெருமையாய் பரவியது என் உயிருக்குள்...

ஏனோ அந்த உள்ளங்கை
வெப்பம் அன்னியமானது..
என் வாலிபக் காலத்தில்

நோய்ப் படுக்கையில்
நீண்ட இடைவெளிக்குப் பிறகு
அவர் என் கரம் பற்றியபோது
மீண்டும் அந்த உள்ளங்கைச்சூடு
ஏதோ சொல்ல எத்தனித்தது..

பின்னொரு கருப்பு நாளில்
சில்லிட்டு கிடந்த அப்பாவின்
உடலின் மீது என் சுடு கண்ணீர் வீழ
வாய்க்கரிசி இட்டபின் விறகடுக்கின்
சிதைமூட்டும் முன்னர் மீண்டும்
ஒருமுறை தொட்டுப் பார்க்கிறேன்..
எனக்கு உந்துதலும்
உயிர்சக்தியும் அளித்த
அந்த சூட்டை எனக்குள் சேமிக்க...

--- ஜி ராஜன்

உலகத்தைப்போல
பழமை வாய்ந்த துயரச்சொல்
பலஸ்தீனியரின் துக்கத்தை
ஒத்த தன்மையாகி
கவிதை மொழிக்குள் அழுகிறது...

இந்த வைகறை மெல்லொளி
நேரத்தில்
நீண்ட அமைதியுடன்
நீளும் ஒரு கேவலில்
இனிய அருவருப்பான நடுக்கம்
அலைகளின் நீர்க்கற்றை
போல் விரவியபடி
நட்புகோரிக்கை விடுப்பதும்
பின் அகலக்கைவிரித்து
அப்பாலுறுவதுமாகிறது.

புதியதும் மகிழ்ச்சியானதும்
அனுபவிக்காததுமான
ஏதோ ஒன்றாய்
ஏமாற்றியே நிற்கும்
உணர்வுகளைப்
பகுத்துப்பார்க்கும்
திறமையற்றவளாய்
விறைப்பாகிறேன்.

காதலுக்கு அப்பாற்பட்டு
எல்லைகளற்றும் வர்ணிப்பிற்குள்
அடங்காததுமான
கணப்பொழுதில்
நிரந்தரமாகிய
நிகரற்ற நேசம் நீயாகி
கடந்து போகிறாய்...

--- திருமலை ஷகி

வெளிச்சம் போதவில்லை நம்
இரவின் சந்தேகங்களை தீர்ப்பதற்கு
மெழுகுவர்த்தியுடனும் தீபங்களுடனும்
கொளுத்திக் கொண்டிருக்கிறோம்
கத்திகளே ரணமாகிறது நம் நாவின்
கூர்மை கண்டு

எங்கள் கைவிரல்களில்
சுருங்கியது நம் சுவாசம் கூடியே
இருக்கிறோம் இரு துருவங்களாக
பேசியே தீர்க்கிறோம் அர்த்தமற்ற
மொழிகளாக எங்கள் சாட்டையால்
வீழும் சமரசத்தில் சாபங்களே மிஞ்சும்

திறக்காவிட்டாலும் சில கதவுகளை
தட்டியே ஆகனும் என்பது விதி
நம் கதவுகளை தட்டினாலும்
நாம் கொளுத்திக்கொண்டிருப்போம்

திறந்திருந்த கதவுகளில்
தாழிட்டுக்கொள்கிறோம் நம் மீதமர்ந்து
வெளிச்சங்களை விழுந்து கிடக்கிறது
வாழ்க்கை பிணம்தேடும் ஓநாய்களாய்
கொளுத்திக்கொள்கிறோம் நாம் நம்மை
அழுக்கின் கொல்லைப்புறங்களில்

நரியின் சிந்தையில் அமர்ந்திருக்கும்
வடையின் தந்திரமே நம் காலம்
நம் கொள்ளிகளுக்கு விடியல்
தராத நம் பிரசவங்களின் பிணங்களை
வெறும் பறையொலியின் கண்ணீரில்
மீட்கமுடியாது

பழுதாகிய நாவின் கண்ணீர்துளிகலில்
பூக்கிறது நம் சிலுவைகளுக்கான
ஆணிகள் சரி தவறென தேர்வில்
துருவங்களாகும் நிஜம் கேள்விகளோடு
நிரப்புகிறது நிஜங்களை நிழலில்
தொலைப்பதா நிழலை நிஜங்களாக
ஏற்பதா வாழவேண்டியிருக்கிறது
கேள்விகளாகும் சில பூஜ்யங்களுடன்

இரவின் சந்தேகங்களை அகற்றவே
சுருட்டிவைக்கிறேன் என் வெயிலை
சில நிழல்களை தீர்க்கவே பக்கத்தில்
இருக்கும் உண்மைகளுக்கு
தோண்டவேண்டியிருக்கிறது ஒரு
அகழியை

--- ஜபீர்

தராசுத் தட்டிலிருக்கும்
அத்தனை கண்களும் என்னையே
வெறித்துக்கொண்டிருந்தது.

எடைக்கல் இட்டு
ஒருகிலோ பார்வையாக
சமன் செய்கிறார் மீன் வியாபாரி

வேடிக்கை என்னவென்றால்

சாப்பிடும் போது பார்த்தால்
வயிறு வலிக்கும் என்பார்கள்
நானோ பார்வையை
சமைத்து பசியாறப்போகின்றேன்.

--- நிலாகண்ணன்

விதியென்று
யாரோ சொல்லிவிட்டு
கடந்து போனார்கள்...

புணர்தலின் அத்தியாவசியம்
விதிகளின் வரம்பிற்குள்
கட்டுப்பட்டு வருமோ...

கர்ப்பத்தின்
பெருந்தவத்திற்கு முன்னதான
அவகாசங்களை
யோசிக்காதோ இந்த விதி...

பொம்மைகளிடத்தில்
அனாதைகளைக் கொடுத்து
விளையாட விட்டு
வேடிக்கை பார்க்கிறது
இந்த மக்குவிதி...

சொல்லிவிட்டு கடந்துபோனவர்களுக்கு-
ஒற்றை வரி...
கடந்து கொண்டிருப்பவர்களுக்கு
நரக வரி...

அனாதையென்ற வார்த்தையே
வலிக்கும் போது-
அனாதையாய் இருப்பதன்
வலி தெரியாதா விதிக்கு..!!

--- பொள்ளாச்சி முருகானந்தம்

அழகான குளத்தில்
மெல்ல நகர்கின்றன
பழுத்த இலைகள்

--- J.K.பாலாஜி

பேசும் மௌனம்
------------------

கடைசி இருக்கையில் பதுங்கியபடி பரிதவிக்கும் மார்கழி
மாதத்து நாய்களிரண்டிற்கும் துல்லியமாய்
தெரிந்துவிடும் அனுமதி வாசனை எதுவென்று....

விபச்சாரியின் கண்ணசைவை குறிதவறாமல் கைப்பற்ற
அந்த VRS கிழவனுக்கு இருட்டு ஒரு பொருட்டல்ல.....

அவ்வளவு நெருக்கடியிலும் துனை நபரால் துல்லியமாய்
கண்டுபிடிக்க முடியும் பார்வையற்றவர் தனக்குத்
தெரியாமல் பதுக்கும் யாசகப் பத்து ரூபாயை .....

காதலியின் குறிப்பறிந்து காதலனால் வாங்கித்தர
முடிகிறது தண்ணீர் பாட்டிலும் பாப்கார்ன் சிப்ஸும்.....

தொண்டு கிழவனின் கரம் பற்றி நடக்கும் கிழத்திக்கு
கேட்கவே செய்கிறது தனது தலைவனின்
மூச்சிறைப்பு.....

எந்திர இறைச்சல் மிகையொலி எச்சரிப்பான்
ஒலித்தட்டின் அதிர்வொலி தொலைக்காட்சி விளம்பரம்
வியாபாரிகளின் முழக்கம் யாசகர்களின் கெஞ்சலொளி
நடத்துநரின் மிரட்டலோசை இத்தனையும் தாண்டி
இருக்கையில் காவலிருக்கும் குழந்தையின் மிரட்சியான
முனகலை உணரவே முடிகிறது வழியனுப்ப
வந்தவர்களிடம் வாசலில் நின்று பேசும் தாயால்......

எல்லாம் இயல்பாகவே நடக்கிறது....
யார் சொன்னது பேருந்து நிலையம் இரைச்சல்
மிகுந்ததென....

--- King Maker

பறவையின் எச்சமொன்றில்
விதைத்த
விருட்சம்
கவிதைகள்...

பறவையின்
சிறகொன்றில்
மையிட்டு
எழுதியது
கவிதைகள்...

பறவையின்
குஞ்சொன்றில்
உணவிட்டு
புசித்தது
கவிதைகள்..

பறவையின்
பறத்தலில்
வாசகனிடம்
முறையிட்டு
எத்தனித்தது
என் கவிதைகள்
யாவும் கவிதைகளே அல்ல
பறவைகள் தான்

--- ராம் பெரியசாமி

ஷாஜகானின் மறைந்து போன
காதலியை மட்டுமல்ல
எனை மறந்து போன காதலியையும்
நியாபகப்படுத்துகிறது
தாஜ்மஹால்....

--- அகத்தியா

பலமான
ஒத்திகையின் பின்னனியில்
கொஞ்சமும் கண்டுகொள்ளாமல்
ஒருவரையொருவர்
கடந்து செல்கிறோம்...
நம் பிம்பங்கள் மட்டும்
பார்த்து கொள்கின்றன!

--- குடந்தை கோ பாலமுருகன்

கருப்புக் கருவறை
கக்கிவிட்ட எச்சவிதை
தளர்வுத்தொல்லைகளால்
வந்தவழி திரும்புதல் இயலாது!

ஆயுள் நீள்தலில் ஆகும் மாற்றமும்
அழகென்றெண்ணும் இளமைத்தேய்வும்
கவலைகளுக்குள் கண்ணி வைத்து
கடந்திடாது மீள்தல் என்பதும்
முடியவே முடியாது!

இறுதி மூச்சு
இயற்கை இயல்பாய்ப் பிரித்தாலும்
இடரில் உடனே பிரிந்தாலும்
இன்னொரு முறை இன்னுடல் புக
பாதை கிடையாது!
வாழ்க்கை ஒருவழிப்பாதை!

--- ரெஜி(அகத்தின் அழகு)

பொதுக்கழிப்பறையில்
ஆபாச வாசகங்கள்
அழிக்கவே முடியவில்லை
வக்கிரம் நிறைந்த மனிதர்களின் மனதை

--- மு_சாத்தப்பன்

எதிர்நோக்கையில் மறைகிறாய்
யாரும் பாராதிருக்கையில் தோன்றுகிறாய்

சட்டென்று பேசுகின்றாய்
பட்டென்று கோபிக்கிறாய்

பின்னரோ மௌனமாகிறாய்
பிரியுமுன் ஒட்டுகிறாய்

சரியென நினைக்கையில் மாறுகிறாய்
சரீரத்தில் என்னமாய் நடிக்கிறாய்

அளவாய் பேசி
பின் அதிகமாக பேசியிருப்பின்
ஆனந்தமாகி இருக்கும்

ஆனால் நீ
அதிகம் அன்பை பொழிந்து
அளவாக பின் மாறுகையில்
அல்லல் படுகிறது

அதனால் மனம் ஏங்குகிறது
அதிகமாகவே எதிர்பார்க்கிறது

இயல்பெல்லாம் இன்னலாவதில்லை
இருக்கையில் பற்றிட முயல்வதில்லை
இழக்கயில் பெற்றிட ஏதுமில்லை

--- ஏ.பி.எஸ்.ஷஹீத்

அழகான அந்த ஊரு
அதனருகே இரண்டு ஆறு
அடையாறு கூவம்னு பேரு
அந்த அடையாளங்களை
அழிச்சது யாரு?

--- முரளி

தேச விடுதலைக்கு
அளவில்லாப்
பங்களிப்பை
அளித்தும்
இந்தியதேசீய
இராணுவத்தில்
தம் இன்னுயிர் பல
ஈந்தும்
என்றென்றும்
தேச ஒற்றுமை காத்தும்
உலகின் மிகத்தொன்மையான
மொழியையும்
பண்பாட்டையும்
தன்னகத்தே கொண்டிருந்தும்
இனமொழி
வெறித்தனங்களைதையும்
இன்றுவரை
அரங்கேற்றாது
அறங்காத்தும்
அத்தனை மொழியினரையும்
அரவணைத்து வாழ்ந்திருந்தும்
தனக்கான
கொண்டாட்டங்களைக்கூட
இன்னொரு தேசத்து
இழிபிறவிக் கூட்டம
தடைசெய்ய
நினைப்பதையும்
தாயக மண்ணிலேயே
விலைபோகும் வீணர்கள்
அதற்கு
ஆரத்தி எடுப்பதையும்
எத்தனைதான்
பொறுத்திருக்கும்
இப்புவியின்
ஆதிச்சமூகம்!

--- வளவன் கரிகாலன்

## மழலை படைத்த உலகம்

-------------------------

"சுவற்றில் கிறுக்காதே" என்று
திட்டுபவர்களை விலக்கி கொண்டு சென்றேன்
மழலை கிறுக்கிய..
இல்லை.. இல்லை..
மழலை படைத்த அந்த புது உலகினுள்
அங்கே அவள்
சூரியனை செடியினில் பூக்கச் செய்திருந்தாள்
வீட்டுக் கூரையில் நிலவை கட்டியிருந்தாள்
வீதியில் விண்மீன்களை பரப்பியிருந்தாள்
வண்ணம் மாற்றியிருந்தாள் வானவில்லிற்கு
வானம் தந்திருந்தாள் பறவைகளுக்கு
கூட்டுக் குடும்பங்களை குலையாமல் வரைந்திருந்தாள்
இன்னும் ஏதேதோ செய்திருந்தாள்
புதியதாய்.. புன்னகையாய்..
வலம் வந்து கொண்டிருக்கிறோம்
நானும் மழலையும் நடந்தே காலார
தேவதைகள் உலவும் அந்த உலகில்
அதோ பாருங்கள்
அவர்கள் இன்னும் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்
வெளியுலகில் நின்றுக் கொண்டு
"சுவற்றில் கிறுக்காதே"

--- மணி_அமரன்

திறப்பதும் மூடுவதுமான
வேலையில் கதவுகள்
என்றுமே அறையின் ரகசியங்களை
அடுத்தவர்களிடம் சொன்னதில்லை
நல்ல நண்பர்களைப் போலவே கதவுகள்...

--- கோ.சிவராஜன்

நதியில் நீந்திவரும்
ஒற்றைச் செம்பருத்திக்காக
ஏன் ஏங்கவேண்டும்
இந்த மனது ?

முகம் தெரியாத
யாரோ ஒருவரின்
தோட்டத்தில் பூத்து
அலைகளில் பயணித்து
இன்று ஏன்
என் கண்களில் படவேண்டும் ?

நீராடும் என்
கைக்கெட்டும் தூரத்தில்
ஏன் அது வரவேண்டும்?
நானோ அதுவோ
நினைத்திருக்கவில்லை
இவ்வாறு நிகழுமென்று !

விதிகளை எழுதி
பழகிய விரல்கள்
அதை ஏந்திக் கொண்டன !
உள்ளுணர்வு சொன்னது
இது உனக்கான மலரென்று

மெல்ல ஒரு முத்தமிட்டுக் கேட்டேன்
சம்மதமா என்று
மலர் யோசிக்கிறது
நீளமாய் மிக நீளமாய்

யோசனைக்குள் அடங்கக் கூடுமோ
அதன் பிரபஞ்சம் ?

--- மதிபாலன்

வெளியே
கொட்டிக் கொண்டிருக்கும் பனியில்
அத்தனை குளிரும் அடங்கியிருக்கிறது
அதன் வெண்மை நிறத்தில்

செயற்கை வெப்பமாக்கியால்
சூடாக்கப்பட்ட வீட்டைவிட்டு
வெளியே சென்றால் கவ்விக்கொள்ளும்
குளிரிலிருந்து தப்புவதற்காக
என் தடித்த கோட்டை அணிந்துகொண்டு
தெருவில் இறங்குகிறேன்

உறைய வைக்கும் குளிரிலிருந்து
என்னைக் காப்பாற்ற
என் உடம்பை இறுக்கி பிடித்து
கூடவே வருகிறது
அந்த கருப்புநிறத்திலான
மிருகத்தோல் மேலங்கி

கோடைக்காலத்தில்
என் அலுமாரியின் ஓர் ஓரத்தில்
கவனிப்பாரற்று கிடக்கும் அது
குளிர்க்காலத்தில் என் இணைப்பிரியா
தோழமை அல்லது தோஸ்து

அதற்காக பல செம்மறி ஆடுகள்
கொலை செய்யபட்டிருக்கலாம்..
அதை பற்றி கவலைபட
நேரமில்லா கூட்டத்தில்
ஒருத்தியாய் கலந்து மறைந்து விடுகிறேன்..
நேரமிருந்தாலும் அதனை விடுத்து
வேறு எதிலோ கவனம்
செலுத்தும் குரூரம் என்னில் நிரம்ப
எளிதில் அதனை மறந்து விடுகிறேன்

வீட்டிற்குள் நுழைந்ததும்
எப்போதும் கதகதப்புடன் இருக்கும்
அந்த கோட்டை கழற்றி
ஆணியில் மாட்டிவிட்டு
மீதமிருந்த குளிரை விரட்ட
ஓர் காபியுடன் அமர்கிறேன்

என்றுமில்லா விதமாய்
இன்று ஏனோ
காபியில்
செம்மறி ஆட்டின் வாசனை

ருசித்து குடிக்க ஆரம்பிக்கிறேன்

--- நறுமுகை

அடையாளம்
-------------
அடையாளம் காண முயன்றது அந்த
அடைக்கலாங் குருவி அன்று என்னை
முன்னர் எப்போதோ பார்த்து இருக்குமோ
சின்னக் கண்களை உருட்டி விழித்தது.

உடல் மொழியில் அதனை வசீகரிக்க
இடம் மாறாமல் இதழ் திறந்து சிரிக்க
என்னோடு அதனை அங்கேயே நிறுத்த
கண்ணோடு கண் நானும் பொருத்த

என்னம்மா நீ யாரைப் பார்க்கிறாய்
என்ற என் குரலில் பயந்து போனதாய்
சன்னமாய் கிறீச்சிட்டுச் சட்டெனப் பறக்க
என் தவறு என்னவென்று வியந்து நின்றேன்!.

--- தா. ஜோ. ஜூலியஸ்

நான் கஞ்சா தோட்டத்தில் மறிகளை மேய்ப்பவன்
அவைகளுக்கு கஞ்சா செடிகளின்
நுனியிலைகள் பறித்து உண்ணத்தருகிறேன்
அவைகள் பசித்தோ அல்லது தனித்தோ
குரலெழுப்புகையில் லாகிரி பூக்கத்துவங்குகிறது
ஆயர்குட்டிகளின் மென்குரல்களில்
குட்டிகுட்டி செடிகளுக்கு
வேர் பதிய இடம்கொடுக்கிறாள் ஐம்பூதங்களில் ஒருத்தி
அக்குரல் கேட்கிற சமயங்களில்
ஒரு சர்ப்பமாக தோட்டத்தை
கிழித்து நதியாய் ஓடி மறிகளின் சிறுகுடல் நிரப்புகிறேன்
மேய்ந்து திரும்புகிற மறியின் கொம்புகளில்
சிக்குண்ட இலைகளை
காயவைத்து எப்போதாவது புகைப்பேன்
கருஞ்சாம்பலை எடுத்து உடல்பூசி
சிவனைப்போல உடுக்கையடித்து
நடனித்து மகிழ்வேன்
தனித்து விடப்பட்ட மேய்ப்பானின்
தனித்த குரலில் புகைகிறது அத்தோட்டம் அப்படியே
அடிமையாகி போகிறபொழுது லாகிரியும்
தீர்ந்துபோகிறது

இனி வேறு வழியேயில்லை
ஒவ்வொரு மறிகளாக விருந்தளிக்கிறேன்
என் சாத்தானுக்கு
அதன் இரைப்பை அவ்வளவு ருசி

--- வினோத்

மின் விசிறியின்
முச்சுழல் இறகாய் நான்
மின்சாரமாய் நீ!

--- மகி

ஒரு பிரபஞ்சத்தின்
அடுத்த நொடி நிகழ்வில்
புதைந்திருக்கிற மர்மம்
விதியென்று விளக்கப்பட்டது...
ஒன்றை ஏற்கும் போது
இன்னொரு தியாகமும்
உள் நுழைகிறது !

வெறுக்கும் உள்ளத்தினுள்
மறுதலிக்கும் கிளையொன்றில்
ஆலாபனையின் ஊஞ்சல்
ஆட்டுவைக்கப்படுகிறது...
துறத்தலின் திடத்தில்
நிறங்கள் என்றும்
ஆள்வதில்லை !

யாரோ விட்டுச்சென்ற
கைத்தடியொன்று
காட்சிப் பிழையல்ல
முதுமைக்குத் துணைவரின் !
கடக்கும் தூரங்கள்
எப்போதுமே நிரந்தரமல்ல...
அவரவர் உள்ளங்கைக்குள் !

--- கா.ந.கல்யாணசுந்தரம்

பலமுறை
பழக்கப்பட்ட
பழைய உதடுகள்தான்...
ஆனால்
ஒவ்வொரு முறையும்
முத்தங்கள் புதுசு

--- சுயம்பு

சிறகுகள் குறைந்திருந்த
சிட்டுக் குருவிகள் ஒவ்வொன்றாய்
அகண்ட வானில் சிறகடித்து பறந்தன
இருண்டு போன தோட்டத்து மூலையிலிருந்து
வட்டமிட வேண்டி - வான் வெளிக்கு.!

வழி காணாது மயங்கி நின்றவைகள் -
மெது வலி கொடுத்து
வட்டமிட்டு பிரிகிறது
புது வழி கிடைத்த மகிழ்வால் .!!

சிறகுகள் வளர்வதும்
இறகுகள் விரிப்பதும்
எல்லைகள் மிகுவதும்
இயற்கைதான் என்றாலும் .!!

கொஞ்சமாய் நெஞ்சம் வலிக்கிறது
எம் வயல் வெளியின் வரப்புகள்
உடைந்து பரவிய தூசுத் துகளென..
அகண்ட வெளியில் பறப்பதைக் காண்கையில்.!!

தத்தித் தாவத் தெரியாமல்,
கொத்தித் தின்ன அறியாமல்
அப்பாவியாய் விழித்த குருவிகளின்
அழகை - பொறுமையாக கண்டு ரசித்தோம்.

கொத்திப் புரட்டின.!
உணவுண்ட கலன்களை.!

மிதித்து மகிழ்ந்தன.!
விதைத்த சில நெற்களை.!

அவைகளில் சில இப்போதெல்லாம்
ஆயிரம் வார்த்தைகள்
பேசுகிறது..!

கண் மூடி,
செவி தாழ்த்தி,
வாய் மூடி கேட்கிறோம்
சிலவற்றின் உபன்யாசங்களை..!!

கவலைகளை விட்டு விட்டு
கனவுகள் எடுத்து
வரச் சொல்லி அழைக்கிறது
மழை பொய்த்துப் போனதால்
சிரிக்க மறந்த எம் வரப்புகள்.!

அவைகள்
பறக்கின்ற வானம்
எல்லைகளற்று அமையட்டும்.!

பொய்த்த எம் வயல்கள்
விடியலைக் காணட்டும்.

--- *Abbas Al Azadi*

கடைவாயில் இருக்கும் ஒருமுனையை
கடித்துத்துப்பும் எண்ணத்துடன்
ஓடும் கால்கள் எனதென்று
ஓடிக்கொண்டு இருக்கிறேன்
கவலையற்று அமர்ந்திருப்பவன் கையில்
கடிவாளமாய் மறுமுனை.

--- வினோத்குமார்_பா

நாயோடு நடைபயிற்சி மேற்கொள்ளும்
பரம்பரை பணக்காரன், போகும் வழியில்
நலம் விசாரித்துச் செல்கிறான்...
கைநாட்டுத் தாயை! முதியோர் இல்லத்தில்!

--- முகில் வேந்தன்

"ஆயா வீட்ல இட்லி வாங்கீட்டு வா"னு
அம்மா குடுத்த தூக்குல இட்லியும்
கத்திரிக்கா கொஜ்சும் கெட்டி சட்னியும் வெச்சு
முத்தமொண்ணும் குடுத்தனுப்பும் ஆயா....

நாலு பசங்க மருமக பேரன் பேத்தினு..
எல்லாத்துக்கும் இட்லி வித்து
ஒத்தாசையா இருந்தா ஆயா..

பெரியவளானப்ப "இதுக்கெல்லாம்
பயந்தா ஆகுமா கண்ணு"னு
நல்லெண்ணெய்ல முட்டைய
கலக்கி தொண்டகுழில ஊத்தி
மூக்க புடிப்பா ஆயா...அவ்ளோதான்
உள்ள போயிரும் குழுக்குனு...

இப்பெல்லாம் ஆயாவ பாக்கறதில்ல
எப்பவுமே இட்லி சாப்டறப்ப
ஆயா பெருமைய பேசாம விட்டதுமில்ல..
"இன்னும் இருக்காமா ஆயா !"னு
கேட்ட அன்னைக்கு அம்மா சொன்னாங்க
ஆளுக்கொரு வீடு கட்டி போன
பசங்களுக்கு காலோட ஒண்ணுக்கு
போய்டற ஆயா வேணாமாம்..
இப்ப சந்தைல இன்னும்
இட்லி சுட்டு பொழைக்கறாளாம் ..

மொதல்ல ஆயா கடைக்கு போகனும்
நாலு இட்லியோட இந்த ஒலகத்து
நியதியெல்லாத்தையும் கண்ணீரோட
சேத்து முழுங்கித் தொலையனும்....

--- உமா செந்தில்

ஒளிந்திருக்கும் நினைவு
---------------------------

பெருங்கதவுக்கு பின்னிருக்கும்
பல்லியைப் போல உன் நினைவு.

ஒளிவு மறைவு அற்ற
திறந்த உள்ளம்
என் கணவருக்குயென
சொல்லும் மனைவி

கதவு சாத்துகையில்
தெரிய வரும்
பின்னொரு பல்லி
இருந்ததென்று....

கதவாய் உயிர்.

சாத்திய பின்
என்ன கிடக்கு
போ....

--- இரா மதிபாலா

முதிர்கன்னியின்
வாழ்வினைப் போலத்தான்
சில வகைப்பூக்களின்
நிலைமையும்..!

கடைசிவரை
கூந்தலைச் சேராமலேயே
வாழ்க்கை
முடிந்துவிடுகிறது !!

--- கவி. விஜய்

ஊசிவந்து குத்தையிலே
அலறிநானும் கத்தையிலே
உன் தோள்பட்ட ஆதரவ
எந்த வார்த்தையில நான் எழுத

மாதாந்திர வலிக்கு
கொக்கிப்புழுவா நான் துடிக்க
அறிவியல் கத சொல்லி
தலகோதி தெம்பு சொல்வ
தீட்டுன்னு யார் சொன்னாலும்
திட்டு திட்டுன்னு திட்டிடுவ

பிரசவ வேதனையில் நான் கதற
தனியாத்தான் நீ அழுத
எனக்கு மட்டும் கையழுத்தி
தெளிவு சொன்ன

இத்தன வருசம் கழிச்சு
காய்ச்சலுக்கு ஊசிபோட
தனியாத்தான் போயிருந்தேன்
தைரியத்த நீ கொடுத்த
புருசன்தான் வரட்டுமே
புள்ளதான் வரட்டுமே
ஊசி குத்தும்போது கத்தையிலே
உன்பேர சொல்லி
'யப்பா'ன்னுதான் கத்தினேன்

--- அகதா

சதக் என்ற ஒலியோடு
நிராகரிப்பின் வாள் இறங்க
தலையொரு திசையும் உடலொரு திசையுமாய்
மரித்திருக்கலாம் உங்களுக்குள்ளும்
ஒரு காதல்

--- போஸ் பிரபு

அக்கா
நீ எனக்கு பாலூட்டவில்லை
இதை தவிர
உனக்கும் அம்மாவுக்கும்
எனக்கு வித்யாசம் தெரியவில்லை..
ஆனால்
ஐந்து வயதில் எனக்கு அன்னையாகி
இருபது வயதில் தந்தையுமாகி
உயிரூட்டியிருக்கிறாய்..

பத்திரமாக இருடா எனும்
உன் வார்த்தையின் இராணுவ பாதுகாப்பில்
உயிர் குடிக்கும் என் துன்பங்கள்
ஒதுங்கி நிற்பதை உணர்ந்திருக்கிறேன் அக்கா..

இன்று உன்னிடம் கூட சொல்ல முடியாத
என் இராச்சத இரவின்
இரகசிய கனங்கள்
என் மேல் அள்ளி முடிந்திருக்கிறது
ஆயிரம் நினைவுகளை ..

பைத்தியமாககட என
பல பச்சை சாபங்கள்.
இன்னும் அறியப்படாத மனவியாதிகள் ..

உன்னை விட்டு பிரிய வேண்டுமென
மரணத்தை எதிர்க்கிறேன் அக்கா..

ஆணையிடு அக்கா
இப்போதே மரணித்து
மறுநொடி உனக்கு
மகனாக பிறக்கிறேன்...!!

--- நவிதா பிரியன்

## துரோகமும் முதுகும்

துரோகத்திலிருந்து புறப்படும் கால்கள்
நடுமுதுகின் பள்ளத்தில்
சதா நடந்தபடியே இருக்கிறது

அப்பள்ளத்தில் பாயும் மாயநதி
துரோகத்தின் விழிகளிலிருந்து பெருகும்
போலி உவர்ப்புதுளிகளாலானது

துரோகித்தல் தொடங்குகையில்
துரோகிக்கப்படுபவரின் முதுகில்
ஒரு விதமான அரிப்பு
சொரிந்தபடியே இருப்பது எதனாலே?

துரோகங்கள் தன் முகமூடிகளை கழற்றி
நிஜமானமுகத்திற்கு திரும்புவதை
நாம் பார்க்கவே முடியாது
ஏனெனில் அது நம் நம்பிக்கையின்முதுகிற்கு
பின்னால் மட்டுமே நிகழக்கூடியது

துரோகத்தின் பளபளக்கும் கூர்மை
முதுகில் குத்துவதால் பெருகும் இரத்தத்தின்வாடையில்
வீசும் காட்டிக்கொடுத்தலின் நெடியை
வாழ்க்கையில் ஒரு முறையாவது எல்லோரும்
நுகர்ந்துதான் இருப்பீர்கள்

ஆதியிலிருந்தே முதுகானது
முழுமையாக பார்க்கமுடியாதவாறு
எப்படி
உடலின் பின்னால் மறைந்துக்கொண்டதோ
அப்படியேதான் துரோகமும்
போலிஅன்பினுடைய முதுகின்பின்னாலே
ஒளிந்தபடியே இருக்கிறது
காலங்காலமாய்

--- அன்பில்பிரியன்

## 'ஏறுதல்' கண்ட மாறுதல்

உணர்வுகள் நசுக்கும்
தேசமடா -இங்கே
உண்மையை உரைப்பது
மோசமடா !
'ஏறுதல்' நடக்கும்
உணர்வுடனே -அவர்
இரவுகள் விழித்தார்
நிலவுடனே !

விடிந்திட வேண்டி
இளகி நின்றார்-வீரச்
சடங்கிது வேண்டி
முழங்கி நின்றார் !
நடந்திடும் நிலைவர
இடையினில் வந்து
நாடகம் போட்டு
ஓட விட்டார்!

பிரிவுகள் மறந்து
உறவு கண்டார் -வீர
பண்பினை வளர்க்கும்
நெறிகளென்றார்,
இளையவர் கோஷம்
பலநிலை மாற்றும்
அறிந்தவர் சதியினை
மூட்டி விட்டார் !

--- கலைநிலா சாதிகீன்

குட்டி தேவதைகள்
--------------------

இளஞ்சிவப்பு வண்ணக் குழம்பை
ஏனோ பிடித்து வைக்கிறது மனம்
என்றிலிருந்து தொடங்கியது
தெரியவில்லை..
காணும் கனாக்களில்
முதலும் முடிவும் ஞாபகத்தில் இருப்பதில்லை போன்று..
எவர் சொல்லிக் கேட்டிருப்பேனோ
எந்தப் புத்தகத்தில் கண்டேனோ
நேற்றுவரை நினைவில்லை
போகும் வழியெங்கும்
இளஞ்சிவப்பு
பார்க்கும் யாவற்றிலும் பரவசம்
சிரிக்கும் பற்கள்
எல்லாம் ஒளிர்கின்றன
என் கைகளில் சிவந்து மலருகிறது
இளஞ்சிவப்பு பூசிய
சிறு செம்பொற் பாதங்கள்..

--- கார்த்திகா அ

யுகம் யுகமாய்
------------------

சில்லு சில்லாய் சிதறிப்போன
கண்ணாடித்துண்டுகளை
ஒட்ட வைத்துக்கொண்டிருக்கிறேன்

அது இறுதியாகப் பார்த்த
உன் முகத்தை
ஒருவேளை பிரதிபலிக்க கூடுமென்று

--- தங்கேஸ்

சித்தாந்தக் கண்ணாடிகள்
------------------------------

இடது வலதாய்
பிரிந்து நிற்கிறோம்.
அனைவரின் கண்களிலும்
அவரவர் கண்ணாடி..

எங்களின் நியாயங்களும்
தர்மங்களும்
உங்களின் கண்ணாடிகளிலும்,
உங்களுடையன
எங்கள் கண்ணாடிகளின்
ஊடாகவும்
அநியாயங்களாகவும்
அதர்மங்களாவுமே
காட்சி தருகின்றன.

எப்போதுதான்
இரு தரப்புமே
கண்ணாடிகளைக்
கழற்றி எறிந்துவிட்டு
கண்களால் மதிப்பீடு
செய்யப்போகிறோம்..?

--- ஆ.மகராஜன்

குருதி தோய்ந்த
கத்தியின் கூர் முனையை
கீறி பிளக்கும் மெழுகுச் சுடர்
போர்களத்தில்
இரு வேறு உடல்கள்
இரு வேறு கொள்கைகள்
ஒற்றை மரணத்தில்..

--- ஜீவநதி

இறுதி நிமிடம்
---------------

இறப்பு சாவு
எத்தனை அபச் சொல் இது
இறுதி நிமிடம் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?

தன்பிள்ளை தான் பெற்ற மகள்
தன் தகப்பனை தாடிவைத்த
ஒடுக்கு விழுந்த
ஐந்துவாய் சலிக்கும் முன்பாக

மருத்துவன் கைவிரித்து
மற்றோர்கள் உதடு பிதுக்கி
மனைவிவரை மனதால்
சடைந்து கொள்ளும் முன்பாக

உன் பிரிவை
உன் மறைவை
உன் முடிவை
பட்டாணி கொறித்துக்கொண்டே
வருந்துவது போன்று
வரவழைத்த மைக்ரோ கண்ணீரோடு
சுற்றி நிற்போர்
பரிதாபம் வேடம் பூணுவதற்கு
சற்று முன்பாக

காலை நீட்டி சோபாவில் நீ
காபியோ கஷாயமோ கண்றாவியோ
தன்னை மறந்து குடிக்கும் நேரம்
உன் காலை இடறி நடக்கும்
பிள்ளையோ மனைவியோ

சாரிங்க என சொல்ல மறந்த
தருணத்திற்கு கொஞ்சம் முன்பாக

ஒரு வாழைப்பபழத்தை உறிக்கும்
சாதுரியம் மாதிரி

ஒரு இளைய ராஜாவின்
வயலின் துணுக்கின்
உயிர் நகர்த்தல் மாதிரி

ஒரு பரங்கிப்பபூவோ பவழ மல்லியோ
தலை மடை வாய்க்காலில் தவழ்ந்து
மிதந்து சடுதியில்
சின்னச் சுழலில் சிக்கி
சிரித்து வைப்பது மாதிரி

ஒரு தாய் தன் மகவை
தன்
மார்பின் சூட்டுக்குள்
தூங்க வைப்பது மாதிரி

மரணம்

இயல்பாக இருக்க வேண்டும்

உலக விடுதலையும் ரசிக்குமொரு
ஒரு உன்னத நிகழ்வு தோழா தோழி

--- வன்னி

பத்து மாதம் காக்கும்
பிள்ளையும்
பலமாதமாக காக்கும்
காவலர்களும்
எட்டி உதைக்கத்தான்
செய்கிறார்கள்
கர்ப்பிணியை.....

(உ)தை புரட்சி

--- பி.கே.சாமி

பிரிவின் வலியிலிருந்து
-----------------------

கார் கால மேகத்தின்
கனத்த வேக ஓட்டத்தில்
நீண்ட பயணத்தின்
ஜன்னலோர இருக்கையின்
கம்பி அழி ஓரம்
என் கண்ணீர்க்கடல் தேசம்

பின்னூட்டல்களில்
இடைவிடாத பயணங்களில்
இதைப்போன்ற
எத்தனை இரவுகளை
நிரப்பியிருந்தாய் என்னோடு நீ...

உனக்கும் எனக்குமான
இடைவெளியென்பது ஏது?

அன்று வழமை போல்
உன் வாசற் கதவு வரை வந்தே
"வாடா டேய் " என்றழைக்க
என் பாசமொழி கேளாது
பூப்பாடை மேனி தனில்
புன்னகைத்தே படுத்திருந்தாய் நீ - உன்
படலைக்கதவு விட்டே
சுடலை வெளி செல்வற்காய்...

எப்படி மறப்பேன்
நீ உயிர் பிரிந்து
உடலங்கள் சிதறி
மண்ணோடு நீறாய்ப்போக
நான் உயிரோடிருந்து
மரணித்த நாட்களை

என் கண்களில் கண்ணீர்
சிந்த முந்தியே
துடைப்பவை உன் கைகள்

மலர்க்கையான் உனக்கு
நான் மலர்வளையம் இடுவதா?

இன்று எட்டாத உயரத்தில் நீயும்
உனை தொட்டுவிட முடியாமல் நானும்...

நான் இன்றும் அழுதுகொண்டிருக்கிறேன்
உன் நினைவுகள் என்னைத்தாக்குகையில்
என் ஆவி மெல்ல மெல்ல அகன்று
உன்னையே நாடிக்கொண்டிருக்கிறது...

நீ மரணித்த ஓர் நாளில்
அந்தப் பால் நிலா
நம் உடல்களில்
பிரகாசத்தைக் கூட்டிக்கொள்ளும்
அந்த சிறுத்த வெளிகளை
கறுத்த மேகங்கள்
கண்ணீரால் நிரப்பிக்கொள்ள

உன் கல்லறை மீது
என் இதய அறைகளைத்திறந்தே
கண்ணீர்ப்பூக்களாய்
கண்மூடிக் காத்திருப்பேன்

சுவாசக் காற்றாய் - என்
ஸ்பரிசத்தோடு உட்பிரவேசித்து
நாடி நரம்பின் வழி
ஓடித்திரியும் செங்குருதியோடே என்
நெஞ்சக்குழிக்குள்
அமர்ந்து கொள்ள
வருவாயா தோழா
உன் புதைகுழி விட்டு....

--- வி. அஜந்தன்

அவர்கள் அன்பானவர்கள்
--------------------------

பஞ்சு மெத்தையில் படுத்துறங்கிக்கொண்டிருகிறேன்
என் எண்ணங்கள் ஏனோ
அவர்கள் அருகில் அமர்ந்திருகின்றது.

எழுபதை தாண்டி இருக்கும்
அந்த பாட்டிக்கு
பாலத்தடியில் தான் படுத்திருப்பார்.

கண்களை இழந்த தாத்தாவும்
கால்களை சுருட்டி அவ்விடத்தில்
தான் இருப்பார்.

ஏன் என்னைக் கண்டதும் வாலாட்டும்
சொறி நாய் குட்டியும் அவர்களோடு தான்.

அவர்கள் தான் எத்துனை பாசம் என்மேல்
"புது சரணாய் துவ" (கடவுள் துணை)
இது
அதிகாலையில் அவர்கள் அளிக்கும் அன்பின் துளி.

நானும் அன்பு தான்
உணவோடு மட்டும் நிறுத்திவிட்டிருக்கிறேன்.

அடைமழை கடும்புயல்
கொடும்பனி காலத்தில் தடுமாறும் மனது

இப்போது அவர்கள் எப்படி இருப்பார்கள்
என்று துடிக்கும் மனதுக்கும் சேர்த்து
போர்வையை இறுக்கமாய் மூடிக்கொள்கிறேன்
எண்ணத்தை போல் இன்றி
இதயம் குளிரில் கல்லாய் போய் இருந்தது...

--- எம் கயல்விழி

ஏதோ உந்தன் ஞாபகத்தாலே பொழச்சுக் கிடக்கு உசுரு
அந்தோ வானம் வளைந்து கிடக்கு
நீட்டி பிடிக்க கிளம்பு

கிளம்பும் புழுதியை பொத்தி பிடித்து
கனவின் கோலம் தீட்டு
உதிரா இலையை தேடி கண்டு
உயிலாய் உயிரை எழுது

மனமே சினமே மோகம் மறைத்து
மனிதனை நீ காட்டு
சிறகே அழகே விரைவாய் அளந்து
உலகின் எல்கை நாட்டு

துணிவே துயரே ஒன்றாய் பின்னி
வாழ்க்கை விதியை மாற்று
குறையும் ஆயுள் விரியும் ஆசை
கனவே நீ இளைப்பாறு

அங்கே காத்துக் கிடக்கு ஆறடிதான்
உனக்கா எனக்கா இன்று
நாளை நாளையென்று நாட்களை கடத்து
ஏதோ உந்தன் ஞாபகத்தாலே பொழச்சுக் கிடக்கு
உசுரு!!!!

--- மஹா பர்வீன்

தன்னை வெட்டி வீழ்த்திய பின்பும்
வெட்டியவரின்
வயிற்று பசியை நீக்கி
நெருப்போடு
தற்கொலை செய்துக் கொள்கிறது..
விறகாய்...
மரம்

--- து.ரம்யா

சாலையோரம் மிதிவண்டியின்
ஒற்றைச் சக்கரம் பொருத்திய
புதுவித இயந்திரத்தை தோலில்
சுமந்துவந்து கீழிறக்கி வைத்தவரை
சிலாகித்துப் பார்க்கலானேன்...

அவ்வழி வந்த தாய்மார்கள்
காய்கறி வெட்டும் கத்திகளை
கொண்டு கொடுக்கிறார்கள்...

அடுத்து அரிவாள்மனையோடு பிரிதொரு
அரிவை வருகிறாள்...

பின் கதிர் அறுக்கும் அரிவாளை
தேய்ந்த பற்களை சரிசெய்யென மூதாட்டி
ஒருவர் கொடுத்து அமர்கிறாள்...

அடர்ந்த மீசையை தடவியவாறு
வீச்சரிவாள் இரண்டை கொடுத்து
புருவத்தை உயர்த்துகிறான்
விருமாண்டி ஒருவன்...

அனைவரையும் காத்திருக்கக் கூறி...
முதலில் வீச்சரிவாளை
சக்கரத்தின் மேற்புரப்பில்
வைத்து மூவிரண்டு நிமிடங்கள்
காலசைக்க இலாவகமாக
கூர்படுத்திக் கொடுக்கிறார்
இயந்திர உரிமையாளர்...

பின் ஏனையயெல்லாம்
கண்களை பறிக்கும் வண்ணம்
கூர்படுத்தப்பட்டு கொடுக்கப்படுகிறது...

மாக்களே வாருங்கள்
உங்கள் மலுங்கிய மூளைகளை
சற்றே மண்டை வழி கைவிட்டு
பிடுங்கித் தாருங்கள்...
கூர்தீட்டிக் கொடுக்கட்டும்...

இலவசம் தான் ஆகும் செலவு
அனைத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்...
பிறகேனும் பயன்படட்டும்
வாழ்விழந்து வாழும் அநேகர்
வாழ்க்கைக்கு ஏதேனும் உதவ
வேண்டுமென சிந்திக்க...

--- நாமக்கல் கிருபானந்த்

தாயன்பு
---------

எட்டி எட்டி உதைக்கையிலே...
எள்ளளவும் வருந்தவில்லை...!

கரு சுமந்த கருவறையும்
துளியும் கலங்கவில்லை...!

தாயென்ற பட்டம் கொடுத்த
தனையன் அல்லவா – நீ

மலடி என்ற கொடுஞ்சொல் நீக்கிய
மாமருந்தல்லவா – நீ

அனாதையாக வீதியில் விட்டாலும்
அணையா விளக்காக
சுடர் விட வேண்டும் மகனே – நீ

--- சக்திப்பிரியன்

எப்போதுமே உன் பேச்சு
வினாத்தாளாகவே இருக்கிறது
விடையெழுதும் அவசரத்தில் நான்
நம் காதலைத் தொலைத்துவிடுகிறேன்

சரியானவற்றைத் தேர்ந்தெடுப்பதிலே
சரியாகி விடுகிறது நேரம்
வாழ்க்கையில் என்னை எழுதி
எப்போது உன்னைப் பெற

எப்போதுமே நீ
கோடிட்ட இடமாகவே இருக்கிறாய்
உன்னை நிரப்பவே முடியவில்லை என்னால்

பத்துப் பொருத்தத்தில்
உனக்கும் எனக்கும் எத்தனை பொருத்தம்
பொருத்திப் பொருத்திப் பார்க்கிறார் உன் அப்பா
தேர்வில் பொருத்துக வினாவைக் கூட
இந்தளவுக்குப் பொறுமையாய் எழுதியதில்லை நான்
பொறுத்தது போதும் வா என்னருகே
பொங்கி வரும் காதலைத்
தாங்கி வரும் பேரழகே

உலக வரைபடத்தைக் கொடுத்து அதில்
நீ இருக்கும் இடத்தைக் குறிக்கச் சொல்கிறார்கள்
நான் மெல்ல மனசுக்குள் சிரித்துக் கொள்கிறேன்
என் உள்ளத்தில் இருக்கும் உன்னை
உலக வரைபடத்தில் தேடிக் குறிக்கச் சொல்கிறார்களே
என்று

நீ பெருவினா
நான் சிறுவினா
மீண்டும் உன்னை
நான் பெறுவேனா?

--- ப.குணா

அக்கரைக் குயில்
-------------------

காதலின் களத்தில் நீதி
கண்களை மூடிக் கொள்ளச்,
சாதலைத் தூசி ஆக்கிச்
சரித்திரம் படைத்தாள் பெண்ணாய் !
மாதின்மேல் மயக்கம் கொண்ட
மதி கெட்ட கோவலனின்,
ஆசைகள் சொன்ன பாடம்
ஆண்டியாய் ஆகி நின்றான் !
கொற்றவன் செய்த பிழையா ?
கொல்லனே செய்த பிழையா ?
கூற்றுவன் சதிராய் ஆடக்
குலமகள் கொளுத்திய கனலா ?
கற்புஅது கனலாய் எரிக்கக்
கள்ளமே புகுந்த நீதி,
பொற்பனை எரிதல் போலே
புவியினை எரிக்கக் கண்டோம் !
மூடிய சிலம்பின் உள்ளே
முழுப்பரல் உறங்குதல் போலே,
வாடிய நேர்மை இங்கே
வலிந்து உடைத்து வெளிவந்திடுமே !
திருகிய முலை பற்றியெரியத்
திருடர்கள் உடனாய் எரியப்
பெண்ணிவள் சக்திக் கெதிரே
மண்ணிலே மாந்தர்கள் இல்லை !
நீதியின் சமநிலை காட்டி
நேர்மையின் நேரினைக் காட்டி
காமன் கைப்பொம்மை யானால்
காவியம் தூற்றும் கண்டீர் !
சேற்றிலே மலர்ந்த கமலம்
சேர்ந்திடும் இறையின் அடியில்,
சாட்சியாய் வந்தாள் ஒருத்தி
சமமவள் கண்ணகி சாட்சி !

--- கே. கமலசரஸ்வதி

அடிக்கடி
கனவில் பாதி தூரம் பயணிப்பதாய்ச் சொல்லும்
வண்ணத்துப்பூச்சிக்கு
ஓர் இறகில்லை...

ஒற்றை இறக்கையோடு
மற்றொன்றை
சரிவர தேட முடியவில்லையென்ற குற்றச்சாட்டு
கடிதம்மூலம் தெரியப்படுத்திக் கொண்டே இருக்கிறது
கனவில்...

இறக்கையை தேடி அலையும்
வண்ணத்துப்பூச்சியின் காவலாளிப் போலவே
திரிகிறேன்...

மகளின் நோட்டு புத்தகத்தில்
மறைத்து வைத்து
"சாமி எப்படியாச்சுஇதை காசாக்கிடுனு
வானத்தைப் பார்த்து வேண்டி நிற்கும்"
அவளை

எதுவும்கேட்காமல்
திறந்து பார்த்தேன்
ஒற்றைசிறகு எப்படியோ காசாக மாறுமென்ற
நம்பிக்கை தெரிந்தது...

இறக்கையைதிருடி
வண்ணத்துப்பூச்சிக்கும்

மகளின் நம்பிக்கைக்கு நூறுரூபாயும்
கொடுத்தும்
பறக்கவிட்டேன்
இரவுகளின் கனவுபொழுதை

--- ஸ்டெல்லா தமிழரசி

தழல் ஈகி முத்துக்குமரன் புகழ் ஓங்குக!
---------------------------------------

தமிழ் நெருப்பின் விதை. !

இனம் விடிய தணல் மூட்டிய
தளிர். !

ஈகம் ஈனும் தாய். !

கிழக்கை காட்டிய சுடர்!

நம் அறியாமை அழித்த
அறத்தீ !

தழல் தின்ற விதைமணிகள். !

நீ கொடுத்த அணுகுண்டை
அடமானம் வைத்துவிட்டோம் !

உன் நெருப்பில் சாதி சண்டைக்கு
அரிவாள் செய்கிறோம் !

உன் வெளிச்சத்தில் பகையழிக்காது
பங்காளி அழிக்கிறோம் !

செத்ததால் வாழ்கிறீர்
கல்லாய் !

வாழ்வதாய் கிடக்கிறோம்
கல்லாய் .!

--- மன்னர்மன்னன் குயில்தோப்பு

சுடு நிலம்
-----------
கோடையின் குத்தாட்டத்தில்
வழிதவறிய முதுமரமொன்று
டீக்கடை நிழலில்
தஞ்சம்புகுந்து
ஒரு டீக்குடை கேட்டு
மெல்ல அமர்கிறது
சில நிமிடங்களுக்கு முன்னால்
அது கறந்த பாலை
குவளைகளுக்கு புகட்டிவிடும்
மாஸ்டர்
பற்பல விநோதங்களை புகுத்தி
அதிலும் குறிப்பிடும்படியாக
பாலருவி
கீழடைந்தபோதும்
மலையை கீழிறக்கி
மீண்டும் விழ வைப்பதில்
கின்னஸ்செல்லாம் அணுவாக
அந்த இடத்தை விட்டு
அகால மரணமடைகின்றன
தோல்திரைந்த முதுமரத்தின்
கையில் தவழ்ந்த
டீக் கிளாஸை
பேத்தியாக நினைத்து
நடுங்கி நடுங்கி
எடுக்க முடிந்ததை
பேரின்பமாக கருதுகிறார்
கடைசிவரை அருந்தாத
குவளையில்
ஒரு ஈ வந்து இசைக்கிறதை
கேட்டுக் கொண்டே
நடந்தார்
பூலோகத்தை உதிர்த்தவாறே

--- சே தண்டபாணி தென்றல்

மவுனமான சிந்தனைகள்
கொண்ட நேரத்தின்
மழைபொழுது காலத்தில்
இடைவிடாது பெய்யும்
இரைச்சலின்
சப்தங்கள் பயமுறுத்த
கண் கொட்டாமல்
பார்த்து கொண்டே
காட்சிகளை பலவாறு
பல கோணங்களாக
பதிவு செய்கின்ற
என்னையே
பல எண்ணங்களின்
பேரடுக்களாய் மாற்றி
வாழ்வில் நடந்த
அத்தனை நிகழ்வுகளையும்
எனக்குள் நிறுத்தி
கொஞ்சம் கொஞ்சமாக
என்னை காலத்தின்
இயக்கத்தில் இருந்து
தடையுற செய்த
கடைசி நொடி துளிகள்
அத்தனையும் என்
இறைவனுடையது
இது இந்த
தனிமை கொண்ட
கிழவனுக்கான
இறுதி பயணம்
ஒன்றின் பதிவுகளானது

--- செல்வ கார்த்திகேயன்

மழை+மனம்

-------------

கலவாடிய இதயத்தை
மீட்டுக்கொள்ள
மனமில்லை
தந்துவிட்ட வலிகள்
தந்தையென
சுமக்கிறது இயற்கை
எனக்காக

மழையில்
நனையவில்லை
மனதால்
நனைந்து கொண்டிருக்கிறேன்

--- கா.இலட்சுமணன்

புனித நூல்

-----------

இறைவனைப் போற்றித் துதித்துப்
பாடி மகிழ்ந்து
அலைகடலென புனிதம் ததும்பும்
கீதை படித்த நம் முன்னோர்கள்
குர்ரான் படிக்கும் என் தந்தை
பைபிள் படிக்கும் உன் தந்தை
விழிகள் மோதக்
'காதல்' படிக்கும் நாம்
நாளைய நம் சந்ததிகளை
அன்பையும்
கருணையையும்
வாசிக்கச் செய்வோம்
புனித நூலாக.....

--- அன்வர் மில்டன்

இறக்கைகள் பொருந்திய
பட்டாம் பூச்சி நான்!
உயர; உயர பறக்கும்
ஊர்க்குருவியும் நான்!
கண்டம் கடந்து அண்டம் சுற்றும்
ஆகாச பட்சி நான்!
கூண்டிலோ! குடிலிலோ!
அரணிலோ! பரனிலோ!
என் கூடு கிடையாது!
கூடு எனக்கு விலங்கு!
அதைக் கட்டி என்னை
கட்டிப் போட முடியாது!
இந்த மரம் சாய்ந்தாலென்ன!
மின்சாரம் பாயும் தந்தியிலே
இருந்து விட்டு போகிறேன்!
குளம், குட்டை மட்டுமா குளிக்க
சமுத்திரமும் எனக்கு அளக்க தெரியும்!
இரை தேடலிலும் என்
இறையான்மை இருக்கும்!
அதனாலே இரையாகிவிட மாட்டேன்!
எந்த வல்லூறுக்கும்!
ப(ற)ரந்த வானில்
சுவாசிக்கவா தடை!
எனக்கும் கொள்கை உண்டு
அது மென்மைகளாலே தகர்க்கப்படும்!
கற்புக்கென தனி வழி இல்லை!
என்னைப் போலவே என்னுடன் பயணிக்கும்!
கலவியும்; என் விருப்பமே!
நான்! ஆண் பட்சியா! பெண் பட்சியா!
சந்தேகம் உங்களுக்கு வேண்டாம்!
என் வரிகளில் என்னைத் தேடாதீர்!
நான் துறவியும் அல்ல;
முற்றிலும் துறந்தவ(னுளு)ம் அல்ல!
ஆச்சரிய குறியும் அல்ல;
ஆச்சார குறியும் அல்ல;

--- சௌமேகலை

சமூகம் (1) - ஓர் அறிமுகம்
----------------------------

என் அம்மா
என்னை ஈன்ற பொழுது
அவள் நலத்தையும்
தாய்மை பேறு மகிழ்வையும்
விசாரித்துக் கொண்டாட வராத
அந்த நாலு பேர்...

அப்பா கொண்டு வரும்
ஒரு வேளை சாப்பாடு சாப்பிட்டு
பசி பட்டினியின் விளிம்பில்
வாழ்ந்த போது கஞ்சி கூட கொடுக்காத
அந்த நாலு பேர்...

கிழிந்த சட்டையோடு
வெறுங்கால் நடையோடு
வெகுதூரம் பள்ளிச் சென்று
திரும்பும் போதும்
கண்டு கொள்ளாத அந்த நாலு பேர்...

படித்து நான் பட்டம் வாங்கியதும்
பேட்டிக் கொடுக்க விடாமல்
சீவி சிங்காரித்துக் கொண்டு
புகைப்படத்தில் இடம்பெற
அடித்துக் கொண்ட அந்த நாலு பேர்...

வேலைக்குப் போய்
காசு பணம் சம்பாதித்து
வீடு வாசல் வாங்கி
கொஞ்சம் முன்னேற
தெருவே தேய்ந்து போக
அடிக்கடி வந்து போகும்
அந்த நாலு பேர்...

மேள தாளத்துடன்
மனைவி என்ற பெயரில்
வேலைக்குப் போன வீட்டில் வசிக்கும்
அந்த நாலு பேர்...

என் நன்மைகளின் போது
செவிடர்களாகவும் குருடர்களாகவும்
மாறி விடும்
அந்த நாலு பேர்...

என் தீமைகளின் போது
கடலலையாய் ஓயாது
ஆர்ப்பரித்துக் கொண்டும்
காட்டுத் தீயாய் ஊர் முழுக்க
பரப்பிக் கொண்டும்
என் பெயருக்கு
ஏதேனும் முத்திரை கொடுத்தும்
பேரானந்தம் அடையும்
அந்த நாலு பேர்..

நான் இறந்த பின்
பாடை கட்டித் தூக்க வரும்
அந்த நாலு பேர்...

இப்படியே வாழ்க்கை முழுதும்
எனக்குத் தெரிந்த முகங்களாகவோ
தெரியாத முகங்களாகவோ
என்னோடு பயணிக்கும்
அந்த நாலு பேர்...

என்னை அறியாமலேயே
என் வாழ்க்கைக்கு
இலக்கணம் வகுத்து
என் வாழ்க்கையை
அவர்களே வாழ்ந்து விடுகின்றனர்....

--- மீனு

## விடியல் தேடும் இரவுகள்

--------------------------

கறுமையில் மறைத்துக்கொள்ளும்
எத்தனை ஏக்கங்கள்...

உணவு இல்லா
அடிப்பிடித்த பாத்திரம்
எத்தனை.......
செமிக்க வழியறிமல்
ஒட்டிய சதை குடல்கள்
எத்தனை......

எண்கள் தெரிய
மைதடவிய காகிதம் காண
சுபதினத்தில் கழுத்தேறிய
மஞ்சள் கயிறு அடகில் அடக்கம்
கண்டது எத்தனை......
கொறிக்க விதையில்லை
கொழுத்த எலிகள் எத்தனையோ
காலம்தவறி வெண்மையடைந்த
பருவம் எத்தனை......

சொல்லி புரியாத எழுத்தில்
அடங்காத ஏக்கம் ஏத்தனை
எட்டும் வாழ்க்கையைவிட்டு
கட்டுண்ட வாழ்வு எத்தனை
தவம்கிடந்து தவறவிட்டு
தடுமாறும் கனவுகள் எத்தனை....

கலக்கங்கள் களவுபோக
கன்னிதன்மையில் தவம்கிடக்கின்றது
மௌனமாய் பனித்துளியின்
ஈரத்துனியை போர்த்திக்கொண்டு
விடியலுக்கு காத்திருக்கும்
மனித இரவுகள்.....!?

--- வீரா

நான் இறந்து கிடந்த அறையில்
அவள் நின்றுகொண்டிருந்தாள்
என் தலைக்குள் இருந்து தரைக்கு
குருதி பரவுகிறது.
அவள் யாரோடோ பேசிக்கொண்டிருக்கிறாள்.

இந்த நிகழ்வு என் வாழ்வில் இன்னும் நடக்கவில்லை
நான் உயிரோடுதான் இருக்கிறேன் என்று
நினைக்கிறேன்.

நான்
இனி அவளைக் கொலைகாரியாகப் பார்க்க
எண்ணும்போது
"இஞ்செயங்க" என்று
ஒரு பறவை
என்னை அழைக்கும் ஒலி
பக்கத்து அறையில் கேட்கிறது

நான் கதவைத் திறப்பதாய் நினைத்தேன் ஆனால்
கண்களைத்தான் திறக்க முடிந்தது.

என் முன் அவள் தேநீரை நீட்டுகிறாள்
கூந்தல் வாசம் கலந்த தேனீரைக் குடிக்கிறேன்
மறதியும் கனவும் ஆவியானது.

அவள் காதலின் மிகுதியைத் தரும்
கொலைகாரியாகிறாள்.

--- நிஸ்பான்_ஹம்ஸா

சீவப்படாமலே
மேலும் கூராக்கப்பட்டுவிட்டது
இரண்டு கொம்புகள்.......
இளைஞர்கள்... மாணவர்கள்......

--- சந்துரு

வெறும் வார்த்தைக்காவது
என்னை என்னாளனே
என அழை
பொய்யாகவே ஒரு காதல் செய்
வீணாகவே ஒரு காதலன் என சொல்
உன் தேவைக்காவது கொஞ்சம்
என்னை கூப்பிடு
ஜன்னலுக்கு வெளியே என்
எண்ணங்களை காரி உமிழ்
வந்துடானே என அப்போதாவது
என்னை கொஞ்சம் நினை
பெரும் தொல்லையே என்று
என் பெயரை முனுமுனு
காதலாகி சாதலாகி ஒரு வாழ்க்கை
தான் காதலைவிட ஒரு பெரிய
அரிய உலகத்தை அறிமுகம் செய்தது
நண்பர்கள் பெற்றோர்கள் தங்கை
தம்பி தாத்தா பாட்டி சொந்தம்
வாய்க்கால் தோப்பு கன்று
தென்றல் இப்படியும்
ஒரு அழகான உலகம்
இங்கேயும் சொர்க்கம் இருக்கு
என அறிமுகம் செய்தான் ஒரு
கிராமவாசி மண்வாசனைகாரன் அவன்....

--- சேகுவேரா சுகன்

பிழைப்பு
---------
மூட்டிய சிதையின் தீயில்
கூராக்கினான் வாழ்வை
வெட்டியான்...

--- புதூர் ராஜ்குமார்

சட்டிக் குழம்புண்ட
கிராமியன் நாம்,
பானை வயிற்றுக்காய்
பட்டிணம் படைசூழ்ந்து,
குட்டிக்கரணமிட்டு
ஒட்டிய வயிறுடன்
முட்டிமோதி முன்னேறிய
கதையை மறந்தாலும்
நாமிட்ட குட்டிகளுக்கு
நம் தாத்தனின் நாட்டு வீரியம்
விழித்தியக்கிய விந்தை கண்டழுகிறேன்,
வந்தே மாதரம்.

--- ஜிடி_ரமேஷ்குமார்

என் காத்திருப்பின்
நிமிடங்களை களவாடிய
கயவர்களை என்
பெருமூச்சின் அக்னி
கொண்டு விரட்டுகின்றேன்
எனக்கு பிடித்த
கரடி பொம்மையை
இறுக்க கட்டிபிடித்து
கொள்கின்றேன்
நகர மறுக்கும் நொடிமுள்ளை
இமைக்காமல் பார்த்து
கொள்கின்றேன்
புத்தகத்தை புரட்டுகின்றேன்
வீட்டிற்குள்ளே நடை
பழகுகின்றேன்
தொலைக்காட்சி ஒலியை
கூட்டவும் குறைக்கவும் செய்கின்றேன்
காத்திருப்பின் நிமிடங்கள்
நகர மறுக்கின்றன

--- ஜானு

துளிப்பாக்கள்
---------------

காய்ந்த பயிர்
பார்வையிட்டுத் திரும்புகிறது
கிளிக்கூட்டம் !

குறையும் ஆடை
கூடிக்கொண்டே போகிறது
நடிகையின் சம்பளம் !

செத்த பாம்பு
கடித்துக் கொண்டிருக்கிறது
எறும்பு !

பருகி முடித்த தேநீர்க்கோப்பை
முழுதும் நிரம்புகிறது
காற்று !

மாடி வீடு
களிமண்ணால் கட்டப்பட்டிருக்கிறது
குளவிக் கூடு !

--- மகிழ்நன் மறைக்காடு

வரவேற்பு
-----------

விண்மழையை வானவில்லும் வளைந்துவர வேற்கும்
--- மேளதாள மோடுயிடி முழங்கிவர வேற்கும்!
கண்பறிக்கும் மின்னலுந்தான் கவின்கோல மாக
--- கார்முகிலை வரவேற்கக் கண்சிமிட்டிப் பூக்கும்!
மண்வாசம் முந்திவந்து வரவேற்பு தந்து
--- மழைவருதற் கறிகுறியை மக்களுக்குச் சொல்லும்!
வண்ணமயில் வானத்தில் மழைமேகம் கண்டு
--- வனப்புடனே வரவேற்றுத் தோகைவிரித் தாடும்!

--- சியாமளா ராஜசேகர்

வைப்பருக்கு தப்பிய மழைத்துளிகள்
எதிர்வரும் வாகனஒளியில் வைரங்கள்.

இரையும் பாடல்அதிர்வுகளில்
கரையும்
ஒரு குழந்தையின் அழுகுரல்.

பக்கத்து சீட்காரரது முணுமுணுப்பு இறக்கிய
மறைப்பில்
மோதி மோதி அழைக்கும்
மழைத்துளிகளைச் சுமந்த காற்று

--- ஜி.சிவக்குமார்

ஆதியில் ஓர் வாழ்க்கை,
ஆதாமோடு ஆப்பிள் திண்ற நொடிகளை உணர்கிறேன்..
என் வளைவெலும்பு உருவப்பட்ட தழும்புகளை
தொட்டுப் பார்த்து..
ஆதிக் காதலின் ஓரிரு துளி இரசங்கள்
பருகிக்கொண்டேன்..
சில மைல்கள் ஏவாளாய் ஆதாமோடு நாகரீகம் கற்று..
மீண்டும் சில நொடிகளில் சுவர்க்கத்திலிருந்து இவ்
உலகிற்கு தூக்கி எறியப்பட்டேன்..

--- அஃப்ரின் சியாத்

நீளமான இரவுகளில் நான் தனித்த
மண் புழுவாய் நெளிய என்னை சிறுக
சிறுக புணரும் கழுகுகளாகிய மனித
மிருகங்களே ...!!!

உங்கள் தாகந்தீர என் மோகவிஷ
மருந்தியது காணதென்றா என்
நாப்கின்களுக்குள் புகுந்து
உதிரம் சுவைக்க பார்க்கிறாய் ...!!!

--- நெல்லை மு. அருண் சபரி

கை கால்கள்...
ஒருங்கே இருந்தும்...
கையேந்திய அவனை..

கண்டு கொள்ளாமல்..
கடந்து வந்து விட்டேன்...

இப்போது...
உண்ண அமரும் போது...
நெருடலாய் இருக்கிறது...
அவனுக்கும் இப்படித்தானே...
பசித்திருக்கும் என்று..

--- எம். செல்வகணேஷ்

கவனமாக நடந்தும்
அச்சொல்லில் இடறி வீழ்ந்தேன்
கரடுமுரடான சொல்
கையை கழலென நெறித்தது
காலுக்கடியே போட்டு மிதிக்கையே
கழலையானது
தரையை தேய்த்து தேய்த்து
நடக்க தரையாகிலும் என் முகத்தடம்
மழைத்துளிகள் பதுங்க ஏதுவாயின
கோயிலுக்கு வெளியே
சுழற்றி வைத்தேன்
வறுமை பீடித்தக் கவிஞன்
களவாடிச் சென்று
தன் கவிதை நூலுக்குள் நுழைத்தான்
ஒவ்வொரு பக்கமாய்
தாவிச்சென்ற சொல்
கடைசி பக்கத்தை படித்து முடிய
என் சிந்தைக்குள் மீண்டும் நுழைந்து
எழுப்பும் வரை உறங்கிக் கொண்டிருக்கிறது..

--- சமிஞ்ஞா தேவி

ஆத்து மீன கையிலெடுத்து..
அளவோடு உப்பிட்டு..
மஞ்சளுடன்.. புளி சேர்த்து..
மணக்கும் இஞ்சிப் பூண்டுடன்..

நல்லெண்ணெய் நல்லா விட்டு..
நால் கலவையை கிளறிவிட்டு..
அம்மியிலே அரைத்த கலவை..
மண்சட்டியிலே கொதிக்குது..

விறகு அடுப்பில் கொதிமணம்..
சிறகாய் காற்றில் பறக்குது..
என் வீட்டு மீன்குழம்பு..
எட்டு ஊரு மணக்குது..

எச்சிலூறும் நாக்குல..
மிச்ச ருசி பார்க்கல..
சோளத்தோடு..கம்புச் சோறு..
சேர்த்து அடிச்சா தேவ ருசி..

அம்மா அவ கையில..
அழகான உருண்டைச் சோறு..
மீன்குழம்போட நீர் மோரு..
மீண்டும்..மீண்டும் திண்ப பாரு..

--- சூர்யா

தார்ச்சாலையில்
படர்ந்து கிடக்கிறது
விளக்கின் வெளிச்சம் !

--- ஆனந்தன்

மாதவிடாய்
------------

தூரம் காரணமாய்
தனியாய் படுக்க வைத்தாள் தாய் ...

ரத்தப் போக்கை பொருட்படுத்தாது
பரீட்சைக்கு ஆயத்தம் ஆகியவள் ..!

ஆரவாரமாய் அல்லாமல்
அலங்காரமாய் அல்லாமல்
அங்கலாய்ப்புடன் கிளம்பினாள் .!

தீட்டுடிமா பார்த்துப் போ என்று
வாசல் வரை உபதேசம் ..!

மாதவிடாய் என்றதும்
அரசுப் பேருந்தில்
மாணியமா கொடுப்பான் ?

மாதவிடாய் என்றாலும்
மானிடன் கண்களில்
மாதுவாகவே தெரிந்தேன் போலும் !

கூட்ட நெரிசலில்
கண் கொத்தியாய்
கண்டெடுத்த கற்றாழை, கருவேலம்
நான் அவனுக்கோ
கதம்பமும், கஸ்தூரியுமாய்..!

மெல்ல உரசிவிட்டு
லாட்டிரி சந்தோஷத்தில்
போனவனிடம்
உரக்க சொல்லவா முடியும் ?

தீட்டுடா !
போய் குளின்னு !

--- கார்த்திக்

உன் புருவக் குறும்பின்
நெளிவுகளில் தான் முதன் முதலாய்
நான் என்னை மீறி பயணித்தேன்

உன் பார்வைகளால்
என்னை உழுதபோதுதான்
எனக்குள் முளைக்கத்தொடங்கினாய்

உன் வெட்கத்தின் பெருவெடிப்பில்
விழுந்த விதவிதமான பூரிப்பில்
நீ இன்னும் அழகானாய்

ஒரு வார்த்தையில்
அத்தனை ஜென்மத்துக்கான
ஆசீர்வாதத்தையும் தந்தாய்

யாரும் கொடுக்காத
கொடுக்க முடியா
மகிழ்வின் உச்சத்தை கொடுத்தாய்

பின்பொறு நன்னாளில்
பிரியங்களின் ஆதி விளிம்பிலிருந்து அத்தனை
கனவுகளும்
நொறுங்க நொறுங்க
நீயேதான் தலைகீழாய்
தள்ளியும் விட்டாய் ...!

--- தனபால் பவானி

நிழல்கள்
----------

அந்த நிழலின் குடிலுக்கு சற்று தொலைவில்தான்
என் நிழலின் நடைபாதை வீடு....

தினமும் இரவில் உத்தேசமாக
10 மணியளவில் என்னைக்
கடக்கும் அதற்கு,
வழித்துணையாக மதுவும் வருவான்....

வாரத்தில் ஒன்றிரண்டு நாள் என்னை
நோக்கி மாமிசத் துண்டுகள் வந்துவிழும்...

இன்று வந்து விழுந்த மாமிசத் துண்டுகளும்
மதுவின் வியர்வையில் நனைந்திருந்தன...

என் கடைசித்துளி பார்வை மறையும்
தூரத்தில் அந்த நிழலின் நிறம் மாறுவதை
உணர்ந்து எனது நிழலை அனுப்பிவைத்தேன்.....

சிறிது நேரத்தில் இரத்தப் புள்ளிகளுடன்
திரும்பிய அது....

ஆண் பெண் பாலினத்தின் வேறுபாடு
அறியாத 12 வயது கொலுசொலியின்
கற்ப்புக் கதறலை அப்படியே ஒப்புவித்துவிட்டு
என் பின்னால் ஒளிந்து கொண்டது....

அந்த கொலுசொலி கோவை முஷ்லினோ,
அரியலூர் நந்தினியோ, சேலம் பவித்ராவோ
தெரியவில்லை.....

மறுநாள் அந்த மிருகத்தின் மனிதநிழலுடன்
மேலும் இரண்டு நிழல்கள்....

"என்னங்க" என்றபடி மல்லிகை மணத்துடனும்
மற்றொன்று அதன் பாதி
உயரத்தில் "அப்பா" என்றபடி
கொலுசொலியுடனும் என்னைக் கடந்து
போன பொழுது....

தலையை மட்டும் உயர்த்தி பார்த்துவிட்டு
படுத்துக்கொண்டது எனது 60 வயதான
ஒற்றைக்கால் ஊன்றுகோல் நிழல்...

--- சக்தி

மஞ்சள் வாசம் வீசும் அக்கா
இல்லாத வீட்டிலிருந்து
நகரம் நோக்கி வந்த கண்ணனுக்கு
மஞ்சள் வாசம் வீசினாலோ மங்கள
இசை கேட்டாலோ அன்று முழுவதும் நரகம்தான்
ஒவ்வொன்றிலும் வாசத்தை புகுத்தி
அடையாளப்படுத்தியது அவள்தான்
பிடிக்காத புகையிலை மது வாசனையில்
குடியேறியவளின் வசம் தற்போது
எந்த வாசங்களும் இருக்க வாய்ப்பேயில்லை
இசையமைக்க கற்று கொடுத்தவள் வாழ்வில்
தற்சமயம் நான்கு சுவரின் முனகல்கள் இருக்கதான்
வாய்ப்புண்டு
கண்ணாக இருந்தவள் கதியற்று கிடக்கிற
சூழலில் மங்கள இசையோடு மஞ்சள் வாசம் வீசும்
திருமண மண்டபத்தில் மகிழ்விசைக்க வந்திருக்கிறான்
கண்ணன்...

--- சீதா